# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. உயிர் எழுத்துகள்

அ) 247 ஆ) 18 இ) 216 ஈ) 12

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. சிலப்பதிகாரக் கதையின் கருப் பொருளாக அமைந்துள்ளது?

அ) குண்டலம் ஆ) மணிமாலை

இ) வளையல் ஈ) சிலம்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நான் உணவகத்தில் உணவு உண்டேன். இதில் வந்துள்ள ஏழாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) உணவகம் ஆ) உண்டேன் இ) உணவு ஈ) நான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அம்பி தனது பாடலில் எதை விட்டு விட்டு ஓடாதே எனக் கூறுகின்றார்.

அ) வீட்டை ஆ) உறவை இ) தமிழை ஈ) நிலத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இணைவின் பயன் என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்.

ஆ) யானைக்கும் அடிசறுக்கும்.

இ) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது.

ஈ) அக்கரைக்கு இக்கரை பச்சை.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. "வா தோழியே இனியும் இப்படி இருக்கமுடியாது" என்ற கவிதையை எழுதியவர்.

அ) உதயவீரையன் ஆ) அம்பி

இ) சாலைஇளந்திரையன் ஈ) இரவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

7. கத்தி கோடரி என்பது

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. மிடறு என்ற சொல் குறிப்பது

அ) வயிற்றை ஆ) முகத்தை

இ) தொண்டையை ஈ) தலையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. புத்தரின் படுகொலை என்ற பாடலை எழுதியவர்

அ) அம்பி ஆ) ஏ.நுஃமான்

இ) க.மு. செல்லப்பா ஈ) கே. நரசிம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சிலப்பதிகாரத்தை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) வீரமாமுனிவர்

இ) சீர்த்தலைச்சாத்தனார் ஈ) தொல்காப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இரவி என்ற கவிஞர் எழுதிய கவிதையின் தலைப்பு

அ) ஓங்குபுகழ்கற்கள் ஆ) இனியும்

இ) மானிடா சொல் ஈ) ஓடிடும் தமிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நூல் நிலையங்கள் பெருமளவு தோற்றம் பெற்ற நூற்றாண்டு

அ) 20 ஆம் நூற்றாண்டு ஆ) 18 ஆம் நூற்றாண்டு

இ) 19 ஆம் நூற்றாண்டு ஈ) 16 ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

13. நாளைக்கு வந்தேன் என்பது

அ) காலவழு　　　　ஆ) இடவழு

இ) வினாவழு　　　　ஈ) மரபுவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. "குற்றியலுகர எழுத்துகள்

அ) ஏழு　　ஆ) நான்கு　　இ) ஐந்து　　ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கை + ஏடு என்பதைப் புணர்த்தினால்

அ) கைஏடு　　ஆ) கைய்யேடு　　இ) கையேடு　　ஈ) கையெடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. யாழ் நூலகம் எரிவதைக் கேள்வியுற்றவுடன் உயிர் நீத்தவர்

அ) க.மு. செல்லப்பா　　　　ஆ) தாவீது அடிகளார்

இ) தனிநாயகம் அடிகளார்　　　　ஈ) லோங் அடிகளார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. திக்குத்திசை என்பது

அ) அடுக்குத்தொடர்　　　　ஆ) அடுக்கிடுக்குத்தொடர்

இ) இணைமொழி　　　　ஈ) இரட்டைக்கிளவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. யாழ் நூலகக் கட்டிடத்தை வடிவமைத்தவர்

அ) எசு.ஆர்.இரங்கநாதன்　　　　ஆ) கே.நரசிம்மன்

இ) க.மு.செல்லப்பா　　　　ஈ) அல்பிரட் துரையப்பா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஆறாம் வேற்றுமை உருபு

அ) ஐ　　ஆ) கு　　இ) ஆல்　　ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்விப் பேரவை

20. ‘‘கன்றிய கள்வன் கையது ஆகின் கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கென’’ என்று கூறியவன்

அ) இளங்கோவடிகள் ஆ) பொற்கொல்லன்

இ) நெடுஞ்செழியன் ஈ) கண்ணகி

அ) ஆ) இ) ஈ)

21. அறம் பொருள் இன்பம் என்பது

அ) முத்தமிழ் ஆ) முக்கனி

இ) முப்பால் ஈ) மூவிடம்

அ) ஆ) இ) ஈ)

22. மை என்ற எழுத்து

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து

இ) உயிர்மெய்யெழுத்து ஈ) ஆய்தஎழுத்து

அ) ஆ) இ) ஈ)

23. அரசியின் சிலம்பைக் களவவாடியவன்

அ) கோவலன் ஆ) பொற்கொல்லன்

இ) நெடுஞ்செழியன் ஈ) காவலர்

அ) ஆ) இ) ஈ)

24. பின்வருவனவற்றுள் பொதுப்பெயருடன் சிறப்புப்பெயர்

அ) தமிழ்மொழி ஆ) ஆலமரம்

இ) சேரன் செங்குட்டுவன் ஈ) வாழைமரம்

அ) ஆ) இ) ஈ)

25. வான் நிலா இதில் தொக்கி நிற்கும் வேற்றுமை உருபு

அ) ஐ ஆ) கண் இ) ஆல் ஈ) கு

அ) ஆ) இ) ஈ)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

26. பின்வருவனவற்றுள் வினைத் தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) இரவு பகல் ஆ) வட்டக்கல்

இ) விளைபயிர் ஈ) தேன் மொழி

அ) ஆ) இ) ஈ)

27. அல்வழித் தொகை

அ) மூன்று ஆ) ஏழு இ) நான்கு ஈ) ஐந்து

அ) ஆ) இ) ஈ)

28. தமிழகத்தின் ஆடல் அரசிக்கான பட்டத்தைப் பெற்றவள்

அ) கண்ணகி ஆ) மாதரி இ) மாதவி ஈ) ஐயை

அ) ஆ) இ) ஈ)

29. பறக்கின்றன என்பது

அ) பெய ரெச்சம் ஆ) வினைமுற்று

இ) வினையெச்சம் ஈ) வினையடி

அ) ஆ) இ) ஈ)

30. சிலப்பதிகாரக் கதை முடிவடையும் நாடு

அ) சோழ நாடு ஆ) ஈழ நாடு

இ) சேர நாடு ஈ) பாண்டிய நாடு

அ) ஆ) இ) ஈ)

புள்ளிகள் 30

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

நகை,அழுகை,இளிவரல்,மருட்கை,அச்சம்,பெருமிதம்,வெகுளி,உவகை ஆகியன எண் சுவைகளாகும். இவை எல்லாநிலைகளிலும் இடம் பெற்று மாந்தரைப் பக்குவப்படுத்துகின்றன. இது பெரும் வலிவுகொண்ட உள்ளத்தாலேயே இயலும். வலிய உள்ளம் இன்றேல் இவற்றைப் பட்டுணரமுடியாது. அன்று அந்தக் கடைசிநாள் வாழ்வின் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து தங்களை மறந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எங்கும் ஓடுகின்ற மாந்தர்.சிறிய நிலப்பரப்பைக் கொண்ட ஒரு சிற்றூர். அங்கு நெருங்கிக் கிடக்கும் மக்கள் கூட்டம் நாலா புறமிருந்தும் வான வேடிக்கைபோல் வானெங்கும் பாய்ந்து சீறும் குண்டுகள் எதிர்ப்போர் இல்லாமலே சிங்களப் படைகள் மக்கள் மீது போர் புரிந்து கொண்டிருக்கின்றன. இதைப்பார்த்து நான் என்னுள் சினக்கின்றேன் சிங்களப் படைகள் மக்களிடையே நுழைந்து வன்கொடுமைகளைக் காட்டுகின்றன. படைகள் ஏவிய ஒரு குண்டு ஒரு பெண்ணின் உயிரைப் பறித்தது. பக்கத்தில் ஓர் அலறல் அம்மா! அம்மா! என்று. இறந்து கிடந்த தாயின் அருகில் இருந்து அழும் நான்கு அகவைக் குழந்தை; நெஞ்சம் வலிக்கிறது; ஆனாலும் உயிர் தப்ப ஓடுகின்றேன். எங்கும் சாவின் ஓலம் என் அம்மம்மா வழியில் படுகாயத்துடன் கிடந்து துடிக்கின்றார். ஆச்சீ என்று கதறிக் கொண்டே தூக்கப் போனேன். ‘‘என்னைக் காப்பாற்ற உன்னால் முடியாது நீ ஓடு தம்பி’’ என்கிறார் அம்மம்மா. நானும் அம்மம்மாவை விட்டு விட்டு ஓடுகிறேன். ஓடும் போது மனதில் ஓர் உறுதியும் எடுத்துக் கொண்டேன்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. வானவேடிக்கை போல் வானமெங்கும் சீறியவை எவை?

2. ''என்னைக் காப்பாற்ற உன்னால் முடியாது நீ ஓடு தம்பி'' என்று கூறியவர் யார்?

3. மக்களிடையே நுழைந்து வன் கொடுமைகளைக் காட்டியவை எவை?

4. எண்சுவைகளும் எவை?

5. இத்தகைய அவல நிகழ்வு எங்கே நடைபெற்றது?

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. சிலப்பதிகாரம் ‘‘நெஞ்சையள்ளும் மணியாரம்’’ என்று புகழப்பட்டதற்கான கரணியங்கள் இரண்டைத் தருக?

2. யாழ் நூலகக்கட்டிடத்திற்கு எவ்வாறு பணம் திரட்டப்பட்டது?

3. மானங்கெட்ட மாந்தரைத் திருத்தி வழிக்குக் கொண்டு வரும் செயலை எவற்றுடன் ஒப்பிடுகின்றார் கவிஞர் ஊதயை வீரையன்?

4. குழந்தைப் பருவத்திலேயே ஒருவரது எதிர்காலம் தெரியும் என்ற கருத்தை விளக்கும் பழமொழி எது?

5. தமிழீழ மாணவர்களுக்கு மாறாத வலியையும் ஆறாத துயரையும் கொடுத்துக் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வு எது ?

6. தீக்குறிகளைக் கண்ட மாதரி ஆயர் குல மங்கையரை அழைத்து ஆடிய கூத்தின் பெயர் என்ன?

7. ‘‘உள்ளம் கோவிலென்றும் அன்பே தெய்வமென்றும் எத்தனை முறையடா சொல்வது’’? என்ற வரி இடம் பெற்ற கவிதை எது?

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4) பின்வரும் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.

கானக் கருங்குயிலே - எங்கள்
காவலரைக் கண்டீரோ

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் புணர்ச்சிவகைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுதருக.

   தோன்றல் :-

   திரிதல் :-

   கெடுதல் :-

2. பின்வவரும் மரபுச் சொற்களை வைத்து பொருள் விளங்கு மாறு சொல்லியங்கள் எழுதுக.

   அ) அணிஅணியாக :-

   ஆ) பதைபதைத்து :-

   இ) ஈவிரக்கம் :-

3. மூன்றாம் வேற்றுமை உருபு இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

4. வேற்றுமைத் தொகை என்றால் என்ன? இரண்டாம் வேற்றுமைத் தொகைக்கு எடுத்துக்காட்டுத் தருக?

5. பின்வரும் வினைச்சொற்களின் இடைநிலைகளைக் கண்டறிந்து எழுதுக.

   அ) பாடினர் :- ______ ஆ) நடந்தார் :- ______

   இ) உண்டான் :- ______ ஈ) எழுதுவான் :- ______

   உ) செல்வாள் :- ______ ஊ) கண்டான் :- ______

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

6) **பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

பசித்தோருக்கு உணவு கொடுக்க வேண்டும் என்னும் நல்லறத்தையே பண்டைய நூல்கள் எல்லாம் வலியுறுத்துகின்றன. இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் அவர்கள் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்கவேண்டும். இவ்வாறு உணவளிப்பவர்கள் தாம் மக்களுக்கு உயிர்கொடுத்துக் காப்போராவர். இதைத் தான் எமது முன்னோர் ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' என்ற பழமொழி மூலம் விளக்கி உள்ளனர். உணவின்றேல் எந்த உயிரும் உயிர் வாழமுடியாது. உணவு கொடுப்போர் தான் உயிரைக் கொடுப்பர் என்ற கருத்து பொதிந்து கிடக்கின்றது. உண்மையில் உணவின்றித் தவிக்கும் வறியோருக்கே உணவளிக்க வேண்டும். வேலை செய்துபிழைக்க முடியாத நோயாளிகள், ஆதரவற்ற முதியோர் உடல் நலக்குறைவுடையோர் போன்றவர்களைக் காப்பதுதான் நல்லறம். நாம் செய்யும் உதவிக்கு மாற்றுதவி செய்யும் ஆற்றல் படைத்தவர்களுக்கு உதவுவது அறமன்று. இப் பண்பை வலியுறுத்தவே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பலை வலியுறுத்தியுள்ளன.தமிழரின் தலையாய பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் திகழ்கின்றது. எனவே பசித்தோர்க்கு உணவளிப்போம். பாரினிலே அறஞ்செய்வோம்.

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ யாழ் நூலகம்

★ எங்கு வாழ்ந்தாலும் எமது பண்பாட்டைப் பேணுவோம்

★ சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கமாக எழுதி அதில் உமக்குப் பிடித்த கதை மாந்தர் பற்றி எழுதுக.

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை